VAALIPAN MINISTRIES SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

இதழ் - 54 / வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை / வைகாசி - 2012



"....உன்னைப் பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன்..."

(யாத் 33 : 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு!

கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை நிறைந்த நாமத்தினால் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

நாட்டினுடைய அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மை ஆட்டம் காணுகின்ற இத்தருவாயில், விசுவாசிகளாகிய நாம் எவ்வாறு இவற்றை முகங்கொடுக்கிறோம், எவ்வாறு சிந்திக்கிறோம் என்பதே இன்றைய கேள்வி?

ஆபிரகாமுடைய நாட்களிலும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. எங்கு பார்த்தாலும் பசி, பட்டினி, நோய்! ஆயினும், அதற்கூடாகவும் அவனைப் போஷித்தவர் இன்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதைப் பலரும் உணர்ந்துகொள்வதில்லை (ஆதி 12:10).

அதேபோலவே, யோசேப்பினுடைய வாழ்விலும் நடந்தது. **சொந்தக் குடும்பத்தால் வெறுக்கப்பட்டு, தள்ளப்பட்டு எகிப்துக்கு அடிமையாய்** கொண்டு போகப்பட்ட வாலிபனைக் கொண்டு எகிப்து நாட்டை மட்டுமல்ல, எந்தக் குடும்பம் அவனை தள்ளி விரட்டினதோ, அதே குடும்பத்தை "நன்மையினாலும், தேசத்தின் கொழுமையினாலும்" ஆதரிக்கச் செய்தவர் எங்கே? (ஆதி 45:18). ஆங்கில வேதாகமத்தில் *Good of the land of Egypt, and ye shall eat the fat of the land" (Gen 45:18)* எனக் கூறப்பட்டுள்ளது. இரண்டு சந்தர்ப்பங்களிலுமே, தேசத்தில் பஞ்சம், பட்டினி எதிர்காலம் என்னவாகும் என்று தெரியாத சூழ்நிலை, எங்கு போனால் உயிர் பிழைக்கலாம் என்று அலைகிறதான வாழ்க்கை!

இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கூடாய் நீங்களும் போனாலும், உங்களை ஆதரிக்கவென ஒருவர் இருக்கிறார். அவரை நம்பி விசுவாசிக்கிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்றவர் (சங் 23:1–6) இன்றும் ஜீவிக்கிறார்! ஒரு அற்புதம் நடக்கிறதா என்று இருப்பவர்களுக்கு இன்றே ஒரு அற்புதம்! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி. நீயும் உன் வீட்டாரும் (இவை எல்லாவற்றிலுமிருந்து) இரட்சிக்கப்படுவீர்கள். (அப் 16:31)

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்........ 24

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

ஆறுகிய நாட்களுள் பத்துப்பேரைக் கொண்டிருந்த தம்முடைய சங்க மானது இப்பொழுது முப்பத்திரெண்டை அடைந்ததைக் கண்டு ஜோன் வெஸ்லி ஐயர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆகவே, வெஸ்லி ஐயர் தன் னுடைய நேரத்தின் பெரும் பகுதியை இச் சங்கத்திற்காக உழைப்பதி லேயே செலவிட்டார். பரிசுத்த ஆவியானவர் அபரிமிதமாக இச்சங்க உறுப்பினர்கள் மத்தியில் தம்மை வெளிப்படுத்த ஆரம்பித்தார். அதிலும் விசேடமாக ஜோன் வெஸ்லி ஐயரின் மீது அபரிமிதமான இறங்கி செய லாற்ற ஆரம்பித்திருந்தார். இதன் விளைவாக உன்னதத்திலிருந்து வரும் வல்லமையினால் நிரப்பப்படுவதைத் தவிர வேறு எந்த ஆயத்தமும் அவ சியமாயிருக்கவில்லை.

*1738*ம் ஆண்டின் இறுதி நாளாகிய டிசம்பர் *31*ம் திகதியன்று நள் ளிரவு வேளையில், ஜோன்வெஸ்லி ஐயரின் "பெட்டர் லேன்" சங்கமானது விழிப்பாராதனைக்காகவும், அன்பின் விருந்திற்காகவும் ஒன்றுகூடியது. ஆங்கிலேயத் திருச்சபையில் போதகர்களாகப் பணியாற்றிய ஒரு ஒக்ஸ் போர்ட் மெதடிஸ்த சபையினரும், அறுபது சாதாரணப் பொதுமக்களும் கூடி, முதல் நூற்றாண்டு சீடர்கள் மேலறையில் பெந்தேகோஸ்தே நாளன்று தரித்திருந்ததுபோல, ஒரே மனதுடன் ஊக்கமாக ஜெபத்தில் உறுதியாகத் தரித்திருந்தனர். அன்று அதிகாலை மூன்று மணியளவில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மத்தியில் அபரிமிதமாக, வல்லமையு டனே இறங்க ஆரம்பித்தார். அன்று நடைபெற்ற அந்த மாபெரும் நிகழ்ச் சியைக் குறித்து வெஸ்லி ஐயர் அவர்கள் தனது நாட்குறிப்பேட்டில் எழுதியிருப்பதை, அப்படியே இங்கு தரவேண்டுமென வாஞ்சை கொள்கி றேன். ஏனெனில் கோட்டைமுனை ஆலயத்தில் தொடங்கி கோடியெல்லை வரைக்குமுள்ள அனைத்துத் திருச்சபைகளிலும், விசேடமாக ஆவியான வரின் அபிஷேகம் குறைவாகவே உள்ளதென, குழுத்திருச்சபைகளினால் விமர்சனம் வழங்கப்படுகின்ற, கருத்துக்கள் யாவையும் நொறுக்கிப் போடு கின்ற வண்ணமாக, அனைத்து மெதடிஸ்த திருச்சபைகளிலும், வெஸ்லி குழுவினர் அடைந்த, பெற்றுக்கொண்ட இந்த அபிஷேக அனல் இந்நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே பற்றியெரிய வேண்டுமென்பதற்காக அந்த நாட்குறிப்பேட்டு வரிகளை அப்படியே தருகிறேன். "அன்று அதிகாலை மூன்று மணியளவில் நாங்கள் யாவரும் ஜெபத்தில் உறுதியாகத் தொடர்ந்து தரித்திருந்தபொழுது, தேவ வல்லமை எங்கள் யாவரின் மீதும் இறங்கினபடியால், எங்களில் பெரும்பான்மையோர் வார்த்தைகளினால் விபரிக்க முடியாத அளவிற்கு ஒருவிதமான மகிழ்ச்சியினாலே மிகவும் அதிகமாக நிரப்பப்பட்டோம். எங்களில் சிலர் தரையிலே விழுந்துவிட்டார்கள். கிறிஸ்துவின் விபரிக்க முடியாத பிரசன்னத்தின் வல்லமையினால் மேற்கொள்ளப்பட்டவர்களாய், ஆச்சரியமும், பயமும் நிறைந்த நிலையினின்று நாங்கள் யாவரும் கொஞ்சமாகத் தெளிவடைந்தபொழுது, உடனே யாவரும் ஒரே குரலில் **"கர்த்தாவே நாங்கள் யாவரும் உம்மைத் துதிக்கின்றோம். நீரே உலகின் ஒரே இரட்சகர் என்பதை எங்கள் முழு மனதுடன் அறிக்கை செய்கிறோம்"** என்று சொல்லி சத்தமாகத் துதித்தோம் என்பதாக எழுதி வைத்துள்ளார்.


எனக்குப் பிரியமாக, இத்தொடரைத் தொடர்ந்து வாசிக்கின்ற வாசகர்களே 'சாட்டர் ஹவுஸ்' பாடசாலை மைதானத்தைத் தினமும் இரண்டு முறை சுற்றியோடிய சிறுவன் ஒருவன் பிற்காலத்தில் இரண்டு இலட்சத்து இருபத்தாறாயிரம் கிலோ மீட்டர்கள் தூரம்வரை பிரயாணம் செய்து, அவருடைய வல்லமையின் எழுத்தாணியாகப் பிரகாசிப்பான் என்பதை எவருமே நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள் என்பதே இத்தொடரின் ஆசிரியனாகிய சுரேந்திரனின் மிகத் தாழ்மையான அபிப்பிராயமாகும். ஏனெனில் ஜோன் வெஸ்லியெனப் பெயர்கொண்ட இந்தத் தேவ மனிதன், ஊழியங்களின் நிமித்தம் பிரயாணம் செய்த தூரமானது இந்த உலகினை ஒன்பது தடவைகளில் சுற்றிவரப் போதுமானது என இஸ்ரவேலின் மூத்த இறைபண்டிதர் சேர்.வில்லியம் பாக்ளே அவர்கள் தனது நூலிலே குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டிதர் ஜோன் வெஸ்லி அவர்கள் ஊழியங்களின் நிமித்தம் தாம் மேற்கொண்ட பிரயாணங்களில் பலவற்றை குதிரைகளின் மீதேறியே செய்துள்ளார் என்பது புதுமையான தகவலாகும். அவர் இங்கிலாந்து தேசத்தின் சகல பகுதிகளுக்கும் குதிரைச் சவாரி செய்ததின் நிமித்தமாக எத்தனை குதிரைகள் களைத்துப்போனதோ அடியானுக்குத் தெரியாது. ஆனால் வெஸ்லி ஐயரோ ஒருபொழுதும் களைத்துப் போகவேயில்லை. நாள்தோறும் இளமையானது புதுப்பிக்கப்பட்ட ஒரு மனிதராகவே தம்முடைய ஊழியத்தில் முன்னேறிச் செல்கின்ற ஒருவராகவே காணப்பட்டார். கனம் ஜோன் வெஸ்லி ஐயர் அவர்கள் தம்முடைய எழுபதாம் வயது வரைக்கும் குதிரைகளின் மீதேறியே தம்முடைய ஊழியங்களைச் செய்தார் எனச் சரித்திரம் சான்று சொல்கிறது. அந்தளவிற்கு அவருடைய மனோதிடன், கிறிஸ்துவின் ஊழியத்தை வலு கவனத்துடனும், ஜாக்கிரதையோடும் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்பதிலேயே அதிக கவனம் கொண்டிருந்தது.

**(வெஸ்லி மீண்டும் வருவார்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரச் செய்வதே...

ஒரு அழகிய மலர்க் கண்காட்சியைப் பார்க்க ஒரு சகோதரி சென்றார். விதவிதமான பூக்களை ரசித்தவாறு சென்றுகொண்டிருக்கும் வேளையிலே ஓர் இடத்தில் அழகிய ரோஜாச் செடி அதன் மலருடன் அவரை வெகுவாகக் கவர்ந்தது. அதன் பராமரிப்பாளரை அணுகி அதைப் பற்றி பல தகவல்களைப் பெற்றவராக மிகவும் ஆவலோடு அதை வாங்கிக் கொண்டு தனது இல்லத்திற்குச் சென்றார். அடுத்தநாள் அதிகாலை முதல் அதைத் தன்னுடைய சொந்தப் பிள்ளை போல் பராமரித்து வந்தார். தனது உறவினர்கள், நண்பர்கள் என எல்லோரிடமும் அதைப் பற்றியே பேசினார். நாட்கள் கடந்தன. அந்தச் செடியும் நன்றாக வளர்ந்து மலர்வதற்கு ஆயத்தமானது. அது முழுமையாக மலராமல் மொட்டாக இருந்த நேரத்தில் அந்தச் சகோதரி அதன் அருகில் போய் அந்த மொட்டை வாஞ்சையோடு தடவிக் கொடுத்தார். அப்போது அந்த மொட்டின் அடியில் இருந்த ஒரு முள் அவரது விரலைக் குத்தியது. அந்த நிமிடத்தில் தான் அவருக்கு நினைவு வந்தது. இவ்வளவு அழகிய ரோஜா மலரிலும் முட்கள் இருக்கும் என்று. அவ்வளவுதான். அன்றிலிருந்து அந்தச் செடியை பராமரிப்பதையே வெறுக்க ஆரம்பித்தார். சில நாட்களிலேயே போதிய நீர் கிடைக்காததால் அந்த ரோஜாச் செடியும் பூக்களைக் கொடுக்காமலே மாண்டு போனது.

**அன்பானவர்களே! இது ஒரு கற்பனைக் கதையாக இருக்கலாம். ஆனாலும் இன்று அநேக கிறிஸ்தவர்கள் இதே நிலையில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சொந்தக் குடும்பத்தில், நெருங்கிப் பழகும் நண்பர்களில், வாழும் சமூகத்தில், திருச்சபையில் என்று நாம் நேசிக்கும் மக்களில் அநேகர் இன்று தமது ஆவிக்குரிய வாழ்வில் மாண்டுபோய்க் கொண்டிருப்பதற்குக் காரணமாகிக் கொண்டிருக்கிறார்கள்.**

**எல்லா மனிதரும் பிறக்கின்றபோதே தேவன் அவர்களுக்குள் நல்ல திட்டங்களையும், தீர்மானங்களையும் வைத்துள்ளார்.**

**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் - (1 தீமோ 2:4).**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரில் காணப்படும் அழகான காரியங்களை விட்டு, வெளிப்புற முட்களை (தீமைகளை) மாத்திரம் பார்த்து, அவர்களை வெறுத்து விசாரிக்காமல் விடுவோமானால் அவர்களின் வாழ்வு தேவனுக்குள் மலராது போவதற்கு நாம் காரனமாகிவிடுவோமல்லவா?


அன்று ரோம அரசின் ஆட்சியில் வரி வசூலிப்பவனாயிருந்து ஐசுவரியத்தில் வாழ்ந்த சகேயுவை யூதர்கள் வெறுத்தனர். ஆனாலும் இயேசு கிறிஸ்து தாமே அவனுக்கு அருகில் சென்று அவனை அழைத்து மீட்டுக்கொண்டார். அதே போலவே ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர்களைத் துன்புறுத்தி, கொடூரமாய் கொன்ற சவுலைப் பார்த்து மக்கள், சீஷர்கள் பயந்தனர். ஆனாலும் அந்தக் கொலை பாதகனான சவுலை தேவன் சந்தித்தார். ஒரு வைராக்கியமுள்ள அப்போஸ்தலனாக அவனை மாற்றினார். கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர் (சங் 145:9). ஆண்டவர் சொல்கிறார் "துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்கு பிரியம்" (எசே 18:23).

இவ்விதமாக **"இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல"** - (மத் 18:14).

அவரால் படைக்கப்பட்ட எல்லாப் பிள்ளைகளையும் மலரச் செய்வதே நம் ஆண்டவரின் விருப்பமாகும். எனவே, எமது பரம தகப்பனுடைய வழிநடத்துதலோடு மாண்டு கொண்டிருக்கிற எமது உறவுகளை பரிசுத்த ஆவியானவருக்குள் மலரச் செய்வோமாக... ஆமென்.

சகோதரி **V.எமிலி**

## மன்னிப்பை மறந்தவன்



அதேமேடை - அதன்கீழே நான்.....
முகங்கள்மாறும், காட்சிகள் மாறுவதில்லை....
உணர்ச்சிமயமான இறுதி நிமிடங்கள் - என்னையே
ஒப்புக்கொடுக்கிறேன் நான்....
இதுவரை வாழ்ந்தது கசந்தது எனக்கு - மன்னிப்பீரா
இறைவா எனக் கதறுகிறேன், முகத்தில் அறைந்து...
இறைவனடி சரணம் என்றேன், நான் இனி உமக்கே என்றேன்....
செல்கிறேன் வீடு நோக்கி - நாட்கள் கடந்தன....

அந்தோ ஒரு அறிவிப்பு - சுவிசேஷகூட்டம் என...
செய்கின்ற பாவம் நினைக்கிறேன்,
மன்னிக்க வேண்டி ஏங்கினேன்,
செல்கிறேன் கூட்டத்திற்கு....
அதேமேடை - அதன் கீழே நான்....


எரிக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பு மிகுந்த வாழ்வு




கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதமும் கர்த்தருக்காக பணி செய்தவர்களை, தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவுக்காக பெரிய காரியங்களைச் செய்த ஊழியக்காரர்களை பார்க்கிறோம். அவ்வாறே இன்று நாங்கள் **"தீமோத்தேயு"** பற்றிப் பார்ப்போம்.

தீமோத்தேயுவுக்கு வயது 20. இளம் வாலிப பிராயத்தில் உலக ஆசாபாசங்கள் உள்ளத்தில் ஒட்டிக்கொள்ளும் வயது இது. ஆனால் தீமோத்தேயு உலக தீய காரியங்களை உதறித் தள்ளிவிட்டு, இயேசுகிறிஸ்துவை முழு மனதோடு ஏற்றுக்கொண்டு இயேசுவுக்காய் தன்னை அர்ப்பணித்தார். இளம் பராயத்திலே தீமோத்தேயுவை ஊழியக்காரனாக்கிய பெருமை பவுல் அப்போஸ்தலனையே சாரும். பவுலுக்கு நீண்டகாலமாக உதவியாளராக தீமோத்தேயு இருந்துள்ளார்.

இவரது தகப்பனார் கிரேக்கர். தாயானவர் யூதப் பெண்மணி. பவுல் அப்போஸ்தலர் தனது முதல் மிஷனெறிப் பயணத்தின் போது லீஸ்திராவுக்கு வந்தவேளையில் தீமோத்தேயுவும் அவரது தாயாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள்.

தீமோத்தேயுவின் விசுவாசத்தையும் ஊழிய வாஞ்சையையும் கண்ட பவுல், இவரையும் தன்னுடனே அழைத்துச் சென்றார். இவர் சிறந்த நற்சாட்சி பெற்றவர். மாயமற்ற விசுவாசம் கொண்டவர். விசுவாசத்தின் உத்தம குமாரனாக அனைவரையும் விசுவாசத்திற்குள் வழி நடத்தியவர் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பை மிகுந்த உண்மையோடும் கவனத்தோடும் நிறைவேற்றியவர்.

ஒருநாள் தெசலோனிக்கேயா பட்டணத்தில் மிகுந்த கலகம் உண்டாயிற்று. பவுல் அப்போஸ்தலனுக்கு விரோதமாக யூதர்கள் கொதித்து எழுந்தார்கள். எனவே, பவுல் அந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்குச் சென்றார். கலகம் பண்ணின யூதர்களை சமாதானப்படுத்தவும் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தவும் பவுல் தீமோத்தேயுவை நியமித்தார். ஆண்டவரின் துணையோடு மிகவும் நேர்த்தியாக கலகத்தை சீர்படுத்தினார். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுலால் "எனக்கு பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரன்". என்று பாராட்டப்பட்டார். எபேசு சபையில் தனது பணியைத் தொடங்கிய இவர், நீண்டகாலமாக அச்சபையின் பேராயராக விளங்கினார். புற மதத்து நம்பிக்கை புறமுதுகு காட்டி ஓட, புது மனிதர்களாக மாற்றப்பட்டனர் அந்நாட்டு மக்கள். ஆயினும் தீய சக்திகளின் நாசவேலை அவரை சூழ்ந்துகொள்ள அவர் மீது தடிகளையும், கற்களையும் வீசினார்கள்.

நல்ல போராட்டத்தைப் போராடிய தீமோத்தேயு, பவுல் அப்போஸ்தலனைப் போன்றே இரத்த சாட்சியாக மரித்தார்.

அன்பான சகோதர சகோதரிகளே! இளம் பிராயத்தில் இருக்கும் நீங்கள் கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானம் எடுக்க வேண்டும். "ஆண்டவரே! உம்மைச் சார்ந்தே என் பயணத்தை ஆரம்பித்து வெற்றியுடன் தொடர உதவி செய்யும்" என்று கேட்போமா...

**பெயர்** : தீமோத்தேயு
**ஊர்** : லீஸ்திரா
**நாடு** : லிக்கவோனியா
**தரிசன பூமி** : எபேசு

சகோ.கு.சுரேன்

**உதவி : "மனிதர்களை தேடிய மாமனிதர்கள்"**

# கவிதைப்போட்டி - 38

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"கர்த்தாவே உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர்" (சங்கீதம் 92:4)**

முடிவுத் திகதி 04.06.2012

## கவிதைப் போட்டி - 37ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"...நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" (யாத் 33:14)**

இப் பயங்கரமான பாவ உலகினிலே
சோர்ந்துபோய் கவலையோடிருக்கையிலே
என்னை அரவணைத்து நேசிக்கும் பரமதகப்பன்
எனக்காக வைத்துள்ள மிகப் பெரிய பரிசு இளைப்பாறுதலே...

S.ஜெ.சுகானினி
இல. 39,
பெரிய உப்போடை,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 53

உருவாக்கம் : J.சேரா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | ■ | 4 | | 5 |
| ■ | 6 | | | 7 | ■ | ■ | |
| ■ | | ■ | ■ | | ■ | ■ | கோ |
| 8 | | | | | | | ■ |
| ■ | | ■ | ■ | ■ | ■ | ■ | 9 |
| ■ | | ■ | 10 | ■ | 11 | ■ | |
| 12 | | | | | | ■ | |
| ■ | | ■ | | ■ | 13 | | |

## இடமிருந்து வலம்

01) கர்த்தருடைய இது எப்போதும் என் வாயிலிருக்கும் என்கிறார் தாவீது.

04) 'ஒமெகா' எனும் கிரேக்க பதத்தை வேதாகமத்தின்படி இப்படியும் கூற லாம் (திரும்பியுள்ளதுடன் இறுதி எழுத்து இல்லை).

06) ஆபிரகாம் வாங்கிய குகை (குழம் பியுள்ளது).

08) சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவி யானவர்.

12) அடக்கம் பண்ணுவதற்கு பயன் படும் பொருள் (இறுதி எழுத்து இல்லை).

13) ரூத் சாயங்காலம் மட்டும் வய லிலே இது பொறுக்கினாள் (குழம்பி யுள்ளது).

## மேலிருந்து கீழ்

02) இவர்களையும் விதவைகளையும் விசாரிக்கிறதே சுத்தமான பக்தி என்கிறார் யாக்கோபு.

03) இவர்களின் மாறுபாடு அவர்களைக் கொல்லும் (தலைகீழ் - உதவி : நீதிமொழிகள்).

05) இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஓர் இடம்.

07) சிம்சோனுடைய தகப்பன்.

09) இவ்வூர்ப் பெண்ணை சிம்சோன் திருமணம் செய்தான் (தலைகீழ்).

10) எப்புன்னேயின் குமாரன் (குழம்பி யுள்ளது).

11) அவர் தமது இதை நன்றாய் விளக்கி கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார் (தலை கீழ்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52 இற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01) சபித்தல்
04) லப (பலன்)
05) யைமா (மாயை)
06) காயு
07) பக்தி
08) கிஆனைக் (ஆக்கினை)
11) சந்தோ (சந்தோசம்)
12) சம்பளம்
13) மம் (மம்ரே)

**மேலிருந்து கீழ்**

01) சம்மா
02) தரியு
03) ஸ்தோத்திரபலி
05) யைரிகி (கிரியை)
07) பஞ்சம்
09) ஆவேசம்
10) க்கூபஆ (ஆபகூக்)

குறுக்கெழுத்துப் போட்டி 52க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி

**வி.எ.ஜெ.ஜெபமலர்**
35/3, பதுளை வீதி, அப்புத்தளை.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 53ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 04.06.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 53
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.



## சிறுவர்களுக்கான
## வினா விடைப் போட்டி இலக்கம் - 45

1) சீமோனுக்கு இயேசு இட்ட பெயர் என்ன?

..............................................................................

2) இயேசு வைத்த 'பொவனெர்கேஸ்' என்ற பெயரின் அர்த்தம் என்ன?

..............................................................................

3) "இடிமுழக்க மக்கள்" என்று இயேசு யாருக்கு பெயரிட்டார்?

..............................................................................

4) சூம்பின கையையுடைய மனுஷனை இயேசு எங்கே வைத்து சொஸ்தமாக்கினார்?

..............................................................................

5) இயேசுவைக் கொலை செய்யும்படி பரிசேயர் யாரோடு ஆலோசனை பண்ணினார்கள்?

..............................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி 44 இற்கான விடைகள்**

1) லேவி / மத்தேயு
2) நான்கு பேர்
3) பாவிகளை
4) கப்பர்நகூம்
5) மனுஷனுக்காக

**வினா விடைப் போட்டி 44ல் சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி**

K.கார்த்திகா
ஆச்சிரம வீதி,
கிரான்.

- இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.
- வினா விடைப்போட்டி 45இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **04.06.2012**

அனுப்ப வேண்டிய முகவரி :
**ஆசிரியர்,**
**வினாவிடைப் போட்டி - 45**
**'வாலிபன்' -**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- *16* வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## சாட்சிப் பகுதி

**"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்" - (சங்கீதம் 126:3)**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! கர்த்தர் உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அநேக நன்மையான, ஆசீர்வாதமான காரியங்களைச் செய்திருக்கிறார். கர்த்தர் உங்களுடைய வாழ்க்கையில் செய்த நன்மையான காரியங்களை நீங்கள் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தும் வண்ணமாக எழுத விரும்புவீர்ளானால்.........

**உங்களது சாட்சியையும் இவ் 'வாலிபன்' சஞ்சிகையில் பிரசுரித்து, கர்த்தருடைய நாமத்தை உயர்த்த வாஞ்சிக்கிறோம்.**

**இந்தப் பகுதியினுடைய நோக்கம் இயேசு கிறிஸ்து இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார் என்பதனை ஒவ்வொரு ஜனங்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதே! எல்லாத் துதியும் கனமும் மகிமையும் நம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவுக்கே உரித்தாகட்டும்.**

**உங்கள் சாட்சியானது கர்த்தருடைய நாமத்தை மாத்திரம் மகிமைப்படுத்துவதாய் ஏறத்தாழ 50 சொற்களுக்குள் இருக்கத்தக்கதாய் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். அத்துடன் நீங்கள் விரும்பினால் உங்களது கறுப்பு-வெள்ளை புகைப்படத்தையும் அனுப்பி வைக்கலாம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கர்த்தர் ஏன் எம்மை ஆசீர்வதிக்கிறார்?

எமது நாளாந்த வாழ்வில் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அனுபவித்து வருகின்றோம். இத்தகைய சூழ்நிலையில் ஆண்டவர் எம்மை ஆசீர்வதிப்பதன் ஊடாக எமக்குப் புகட்டுகின்ற செய்திகளை இங்கு ஆராய்வோம். தன்னுடைய படைப்புக்களான மக்களை ஆசீர்வதிப்பது ஆண்டவருக்கு விருப்பமான செயல் என திருமறை கூறுகின்றது. அதாவது இஸ்ராயேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியமான செயல் என்பதை எண்ணாகமம் 24:1 எமக்குக் கூறுகின்றது. ஆதியிலே கர்த்தர் ஆதிப் பெற்றோரை ஆசீர்வதித்ததை ஆதியாகமம் 1:28ல் நாம் காணலாம். இவ் உதாரணங்கள் வாயிலாக மனுக்குலத்தை ஆசீர்வதிப்பது கர்த்தருடைய சித்தமாகும் என்பதை நாம் உணரலாம்.

கர்த்தர் எம்மை ஆசீர்வதிப்பதன் ஊடாக நாம் மற்ற மக்களுக்கு ஆசீர்வாதம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற உண்மையை உணர்த்துகின்றோம். எனவே ஆசீர்வாதம் ஒருபுறத்தில் நன்மைகளை ஏற்படுத்திய போதிலும் மறுபுறத்தில் பெரிதான சவாலையும் பொறுப்பையும் எமக்குத் தருகின்றது. குறிப்பாக, கர்த்தர் ஆபிரகாமை அழைத்து அவரை ஆசீர்வதித்து பூமியில் உள்ள அனைத்து இனங்களுக்கும் அவர் ஆசீர்வாதமாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றார் (ஆதி.12:3). மேலும் கர்த்தர் இஸ்ராயேல் மக்களைத் தெரிந்தெடுத்து அவர்களை ஆசீர்வதித்து அவர்களை நோக்கி அவர்கள் பூமியில் உள்ள அனைத்து இனங்களுக்கும் ஒளியாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். (எசாயா 49:6).

கர்த்தருடைய ஆசி பட்ச பாதமற்ற முறையில் மனுக்குலத்தின்மீது பொழியப்படுவதை நாம் காணலாம். அவருடைய ஆசியை எந்த இனத்திற்குள்ளோ, மொழிக்குள்ளோ, கலாசாரத்திற்குள்ளோ, மதத்திற்குள்ளோ எம்மால் கட்டுப்படுத்தி விடமுடியாது. உதாரணமாக ஆண்டவர் இயேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மலைப்பிரசங்கத்தின்போது தேவனின் ஆசியைப் பற்றிய புரட்சிகர மான சிந்தனையை முன்வைக்கின்றார். "கர்த்தர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி மழையைப் பொழியப் பண்ணுகிறார்" எனக் கூறினார். இக்கூற்றின் வாயிலாக கர்த்தரின் ஆசி பட்சபாதமற்ற வகையில் பொழியப்படுவதை நாம் காணலாம். எனவேதான் ஆண்டவர் எத்தகைய வேறுபாடுகளும் இன்றி உரோம படைத்தளபதியாகிய கொர்னே லியுவின் ஜெபத்தைக்கேட்டு அதற்குப் பதிலளித்ததை நாம் அப்போஸ்தலர் பணிகள் 10ம் அதிகாரம் முதல் மூன்று வசனங்களில் அவதானிக்கலாம்.

கர்த்தர் எம்மை ஆசீர்வதிக்கும்போது அது எமது தகுதிநிலையினால் கிடைக்கின்ற ஒரு பரிசு என எண்ணாமல் மாறாக அவருடைய கிருபை யினால் தகுதியற்ற எங்கள் மீது காண்பிக்கப்படுகின்ற ஈவு என்ற சிந்தனையை வளர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக லூக்கா 18:9-14ம் வசனம் வரையுள்ள பகுதியில் பரிசேயன் ஆண்டவரை நோக்கி "ஆண்டவரே! நான் கொள்ளை யர், நேர்மையற்றோர், விபசாரர் போன்ற மற்ற மக்களைப் போலவோ இந்த வரி தண்டுபவரைப் போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்து கின்றேன். வாரத்தில் இருமுறை உபவாசிக்கிறேன். என் வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன்" என மன்றாடினார். ஆனால் மறுகரை யிலே ஆயக்காரன் தன் மார்பிலே அடித்தவனாக ஆண்டவரை நோக்கி பாவியாகிய என்மேல் கிருபையாய் இரங்கியருளும் என மன்றாடினார். இவருடைய மன்றாடல் ஆண்டவரால் கேட்கப்பட்டது எனத் திருமறை கூறுகின்றது எனவே, ஒரு மனிதனின் தகுதிநிலையால் கர்த்தர் அவனை ஆசீர்வதிப்பது இல்லை என்ற உண்மை இச்சந்தர்ப்பத்திலிருந்து வெளிப்படு கின்றது. மேலும் எமது திருவிருந்தின்போது நாங்கள் தகுதியற்றவர்கள் என்பதை அறிக்கையிட்டு ஆண்டவரே எம்மை ஆசீர்வதித்தருளும் என மன்றாடுகிறோம். இதன் மூலம் அவரின் ஆசி அவர் எம்மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்பாட்டினால் ஏற்படும் ஒன்று என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

மத்தேயு 25ம் அதிகாரம் 13 தொடக்கம் 30ம் வசனம் வரையுள்ள பகு தியில் ஆண்டவரின் ஆசீர்வாதத்தின் இன்னுமோர் படிநிலையை நாம் காணலாம். ஆண்டவரின் ஆசி எல்லோருக்கும் அருளப்படும் ஒன்றாகக் காணப்படுவதனால் நாம் அதைக்குறித்து திருப்தியடைய அழைக்கப்படு கின்றோம். மாறாக அதனை பிறவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தல் கூடாது. மேலும் நிபந்தனையை விதித்து கர்த்தரை ஆசீர்வதிக்குமாறு எமது வலைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை விழுத்திக் கொள்ளாமல் மாறாக கர்த்தர் விரும்புகின்ற பிரகாரம் எம்மை ஆசீர்வதிக்க கேட்டுக்கொள்வதே மிகப் பொருத்தமானதாகும் (1 நாளாகமம் 4:10).

ஆண்டவரின் ஆசி பொறுப்புள்ளதாகவும் பட்சபாதமற்றதாகவும் அவருடைய கிருபையை மையமாகக் கொண்டமைந்ததாகவும், நிபந்தனையற்றதாகவும் மனிதர்மேல் பொழியப்படுகின்றது. ஆண்டவர் எம்மை ஆசீர்வதிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவ் ஆசீர்வாதம் எமக்கு அருளுகின்ற செய்தியையும் கருத்திற்கொண்டு அதற்கு பிரமாணிக்கமாய் வாழ ஆண்டவர் உதவி செய்வாராக!

**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி,
பிலிமத்தலாவை.

# கர்த்தருடைய சித்தம் + கர்த்தரைப் போன்ற வாழ்வு = பரலோகராஜ்யம்

**மத்தேயு 7:21**

**"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை"**

**கர்த்தருக்குள் அன்பான சகோதரனே சகோதரிகளே!**

கர்த்தரின் இரண்டாம் வருகைக்கான வேளையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற எமக்கு கர்த்தர் முன் வைக்கின்ற சவால் பரலோகராஜ்ய பிரவேசிப்பு / நுழைவு.

கர்த்தருடைய 2ம் வருகையின் போது அவருடன் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பேன் என்கிற நிச்சயம் இன்று எம்மில் எத்தனை பேருக்கு உண்டு? என்ன, உள்ளத்தில் சந்தேகம் எழுகின்றதா???

கர்த்தர் எம்முன் வைத்துள்ள சவாலை நாம் ஜெயித்துக் கொள்வதற்கான வழியையும் அவரே நமக்கு கற்றுத் தருகிறார். அதுதான் அவரின் சித்தப்படி நாம் வாழ வேண்டும் என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி 22:12 இல் இவ்வாறு கூறப்படுகின்றது. **"இதோ, சீக்கிர மாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது"**. நாம் கர்த்தரின் சித்தத்தை அறிந்து அதன்படி அவரைப் போல் வாழ்வோமேயானால் பரலோகராஜ்யத்தில் எமது பலன் மிகுதியாய் இருக்கும்.

கர்த்தருடைய சித்தம் என்றால் என்ன என்ற கேள்வி உங்கள் உள்ளத்தில் எழுகின்றதா? அதற்கான பதில் இதுதான். நாம் இந்த உலகத்தில் உருவாக்கப்படுவதற்கு முன்னமே அவர் எம்மைத் தெரிந்து கொண்டு எமக்கு என்று, எம்மைக் குறித்ததான ஒரு நோக்கத்தையும் வைத்திருக்கின்றார். நாம் இவ்வுலகிலே பிறந்ததன் பின்னர் நாம் செய்கின்ற ஒவ்வொரு விடயமும் கர்த்தரின் நோக்கத்தை நிறைவேற்றுவதாக அமைய வேண்டும். அவ்வாறு அமையுமாயின் அதுவே கர்த்தரின் சித்தமாகும்.

இதனை யோபு 23:14 தெளிவாகக் கூறுகின்றார். **"எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார்"**. கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கு சில முறைகள், சில அடையாளங்கள் உண்டு. அவை,

1) ஜெபம் செய்து தேவ சித்தத்தை அறிந்து கொள்ளல்.

2) கர்த்தருடைய வார்த்தையைத் தியானிக்கும் போது வார்த்தைகளின் ஊடாக தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார்.


3) தரிசனம், சொப்பனம் ஊடாக வெளிப்படுத்துவார்.

ஜெபத்தின் ஊடாக கர்த்தரின் சித்தத்தை அறிந்துகொள்ளல் எனும் போது நாம் குறித்த ஒரு விடயத்திற்காக கர்த்தரின் பாதத்தில் அமர்ந்து ஜெபிக்கும் போது அதைக் குறித்ததான பாரம், சுமை சமாதானமாக மாறுவதை எமது உள்ளம் உணரும். அப்போது கர்த்தர் குறித்த விடயத்தை அவரின் சித்தப்படி ஏற்ற வேளையில் நிறைவேற்றுவார்.

கர்த்தருடைய சித்தப்படி செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல் எமது வாழ்க்கையை அவரைப் போல வாழ அர்ப்பணிக்கவும் வேண்டும். அதையே கர்த்தர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

கர்த்தருடைய 2ம் வருகையின் போது அவரோடுகூட நாமும் பரலோக ராஜ்யத்தை சுவீகரிக்க எமது வாழ்வை அவருடைய சித்தத்திற்கு அமைய மாற்றிக்கொள்வோமா????

முடிவு உங்கள் கையில்....



P.குனோறி பிறிசில்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபத்தின் மூலம் ஜெயம்





ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாக அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவரும் உலகத்தில் விலையேறப் பெற்றவர்களாக மற்றவர்களை விட சிறந்தவர்களாகத் திகழ வேண்டும். நமது ஆண்டவருக்கு மகிமையையும் புகழையும் சேர்க்க வேண்டும். கர்த்தர் எம் ஒவ்வொருவரையும் தெரிந்துகொண்டதன் நோக்கம் இதுவே. கர்த்தர் பிரியப்படுகிற, அவரது சித்தப்படி வாழுகிற வாழ்க்கை வாழ்வது என்பது மிகவும் சுலபமான ஒன்றல்ல. எங்களது சொந்த பலத்தினால் அவ்வாறு வாழ்வது இயலாத ஒன்றாகும். கர்த்தரோடு சேர்ந்து, அவரது வசனத்தில் நிலைத்திருந்து, அவரோடு உறவாடி வாழும் போது நிச்சயமாகவே ஜெயம் பெற முடியும். சிலர் படிப்பில் "எத்தனை முறை படித்தாலும் சித்தியடைய முடியவில்லையே" என்பார்கள். சிலர், "வேலையில்லை, வேலையில் திருப்தியில்லை, வாழ்க்கையில் வெற்றியில்லை" என்பார்கள். இவற்றையெல்லாம் மனதில் போட்டு குழப்பியடித்து மொத்தத்தில் வாழ்வில் நிம்மதியே இல்லை என்பார்கள்.

**"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்"** (பிலி 4:6) என வேதாகமம் தெளிவுபடுத்துகிறது.

ஆம் சகோதரர்களே! நாம் கவலைப்படக் கூடாது என்றே ஆண்டவர் விரும்புகிறார். உங்கள் கவலைகள், கஷ்டங்கள், கண்ணீர்கள் எல்லாவற்றையும் அவர்மீது இறக்கி வைத்து விடுங்கள் என்று (1பேதுரு 5:7)ல் கூறுகின்றது. நீங்கள் உங்கள் எதிர்காலத்தைக் குறித்து, படிப்பைக் குறித்து, கவலைப்பட வேண்டாம். ஆண்டவர் நம்மைப் படைத்தது இவற்றைக் குறித்து கவலைப்பட்டு முடங்கிக் கிடப்பதற்கல்ல. அவரது சித்தத்தை வெளிப்படுத்தும் கருவிகளாக நம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார். யோசித்துப் பாருங்கள்! யோபுவுக்கு வந்த சோதனைகளைப் போலவா நமக்கு பெரிய சோதனை வந்துள்ளது. இல்லையே! கர்த்தர் மேல் உங்கள் பாரத்தை இறக்கி வைத்துவிடுங்கள். உங்கள் தேவைகளை ஜெபத்தின் மூலம் ஆண்டவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். நம்முடைய ஆண்டவர் ஜெபத்தைக் கேட்கிறவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பதிலளிப்பவர். அவர் இன, மத, மொழி, பேதங்களுக்கு அப்பாற் பட்ட உண்மையான உயிருள்ள ஆண்டவர். அவர் நம் கூக்குரலை நிச்சயமாகவே கேட்பார்.

"நான் எடுத்த எந்த முயற்சியும் தடைப்படுகிறதே. பிசாசு அதைத் தடை பண்ணுகிறானே. ஏதாவது ஒருவிதத்தில் நான் தோற்கடிக்கப் படுகிறேனே. இதற்கு ஜெபித்தால் மட்டும் ஜெயம் கிடைக்குமா? என நீங்கள் நினைக்கலாம்.

ஆம்! முழு மனதோடு கர்த்தரை நோக்கிப் பார்த்து, குயவன் கையிலுள்ள களிமண்ணைப் போல எம்மை நாமே தாழ்த்தி, அவரது கரங்களில் ஒப்புக்கொடுக்கும் போது கர்த்தர் எம்மை விலையேறப் பெற்றவர்களாக மாற்ற சித்தமுள்ளவராயிருக்கிறார்.

நாம் பலவீனமானவர்கள்தான். ஆனால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வல்லமையுள்ளவர். இவ்வுலகிலே இல்லாத ஒன்றைக் கூட உருவாக்கித்தரும் சர்வவல்லவர். நாம் ஜெபிக்கும் போது அவர் தம்முடைய பரிசுத்த ஆவியை நம்மில் ஊற்றுவார். ஆவியில் நாம் நிரம்பும் போது நம்மை அபிஷேகித்த ஆண்டவர் நமது பலவீனத்தை பலமாக மாற்றுவார்.

"கர்த்தரே ஆவியானவர்! கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு (2 கொரி 31:7) என்று வேதம் கூறுகின்றது. நாம் நமது பிரச்சினைகளை வைத்துக் கொண்டு புலம்பினோமேயானால் பிசாசானவன் இலகுவாக நமக்குள் கிரியை செய்ய ஆரம்பித்துவிடுவான். நம்மால் தனித்து பிசாசை வெல்ல முடியாது. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் நம்மோடு இருக்கும் போது நிச்சயமாக நம்மால் பிசாசை வெல்ல முடியும். பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்க்கையில் வரும் போதும் செயற்பட ஆரம்பிக்கும் போதும், பிசாசால் நிற்க முடியாது. ஜெபத்தின் வல்லமையைப் புரிந்து கொள்ளும் போது ஜெபத்தின் மூலம் முடியாத காரியமே இல்லை என்பதை உணர முடியும்.

ஒரு நாளில் 24 மணி நேரத்தை ஆண்டவர் நமக்குத் தந்திருக்கிறார். அதில் அவருடன் பேச, உரையாட 1 மணி நேரமாவது செலவழிக்கிறோமோ? ஆண்டவருடன் மனம் விட்டு பேசி, அழுது உள்ளமுடைய துதிக்கின்றோமா? என்று கேட்டால் பெரும்பாலானவர்களின் மனச்சாட்சி இல்லை என்றே கூறும்.

1 மணி நேரம் உலக காரியங்கள் அனைத்தையும் விட்டு தனிமையாக கதவுகளைப் பூட்டி ஆண்டவருடைய வசனத்தைத் தியானித்து ஜெபித்துப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் மாற்றத்தைக் காண்பீர்கள்.

**R.J.S.ஹனா**
திருக்கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசிக்கு

## தேவன் அளிக்கும் வாக்குத்தத்தங்கள்



*"அன்றியும் உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப் பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது" - (ரோமர் 4:13)*

*அன்று கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை சிறிதளவேனும் சந்தேகிக்காமல், அப்படியே முழுமையாய் நம்பிய ஆபிரகாமுக்கு கர்த்தர் உண்மையுள்ளவராய், தாம் வாக்குப் பண்ணியதை நிறைவேற்றினார். அதுபோலவே இன்றும் அவரையும் அவரது சத்தியத்தையும் விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் கொடுக்கும் சில வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள்.*

### 1. குறைவுகளைச் சந்திப்பார்

*என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் - (பிலிப்பியர் 4:19)*

### 2. பலவீனத்தில் பலமளிப்பார்

*என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் - (II கொரி 12:9)*

### 3. திராணிக்கு மேலாய் சோதிக்கப்படாமல் காப்பார்

*உங்கள் திராணிக்கு மேலாய் நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் - (1 கொரி 10:13).*

### 4. சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக அமைப்பார்

*அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர் 8:28).*

### 5. பாவம் மன்னிக்கப்பட்டு இரட்சிப்பைத் தருவார்

*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் - (மாற்கு 16:16)*

### 6. நித்திய ஜீவனைக் கொடுப்பார்

*நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை - (யோவான் 10:28).*

### 7. மரணத்தை ஜெயிக்கச் செய்வார்

*இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லோரும் சாட்சிகளாயிருக்கிறோம் - (அப்.2:32)*

சகோ. எனிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் முகத்தைத் தேடி....

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர / சகோதரிகளே! இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

**“அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணக்கூடும்”** சகரியா 4:10 என்பது போல் அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட வாலிபன் ஊழியங்கள் மூலமாக கர்த்தர் செய்து வருகிற மகத்தான கிரியைகளுக்காக அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

கடந்த மாதத்தில் வாலிபன் ஊழியங்களினால் 'இயேசுவின் முகத்தைத் தேடி' என்கிறதான தலைப்பில் எழுப்புதல் சுவிசேஷ கூட்டங்கள் களுதாவளை தொடக்கம் கோமாரி வரை நடைபெற்றது. 16.04.2011 – 20.04.2012 வரையான நாட்களில் களுதாவளை, களுவாஞ்சிகுடி, கல்முனை, திருக்கோவில், கோமாரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மெதடிஸ்த ஆலயங்களில் இக்கூட்டங்கள் நடைபெற்றது. இவ் எழுப்புதல் சுவிசேஷ கூட்டத்தை




நடத்த இந்தியாவைச் சேர்ந்த சுவிசேஷகர்களான சகோ.ஜோசப் நவீன் அவர்களும், சகோ.கிறிஸ்டோ இம்மானுவேல் அவர்களும் வருகை தந்திருந்தனர். மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிய இக்கூட்டங்களுக்கு இயேசுவின் முகத்தைத் தேடி அநேக மக்கள் வந்திருந்தனர்.

கர்த்தர் கிருபையாய் எல்லா மக்களையும் தொட்டு ஆசீர்வதித்தார். அநேகர் வியாதியிலிருந்து விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றார்கள். மூட்டுவாதத்தினால் பல வருடங்களாக அவதிப்பட்டுக்கொண்டிருந்த கல்முனையைச் சேர்ந்த ஓர் சகோதரிக்கு கர்த்தர் அன்றைய நாளிலே சுகத்தைக் கொடுத்து விடுதலையாக்கினார். வந்திருந்த அனைவருக்கும் முன்பாக அச்சகோதரி மகிழ்ச்சியுடனே தேவனை மகிமைப்படுத்தினார். நடைபெற்ற எல்லாக் கூட்டங்களும் ஆசீர்வாதமாகக் காணப்பட்டது. எல்லா துதிகன மகிமையும் இரட்சகர் இயேசு கிறிஸ்துவுக்கே செலுத்துகிறோம்.

இக்கூட்டங்களை ஆயத்தப்படுத்திய களுவாஞ்சிகுடி, களுதாவளை, கல்முனை. திருக்கோயில், கோமாரி மெதடிஸ்த ஆலய சபை குருவானவர்களுக்கு வாலிபன் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர் தாமே உங்கள் பணிகளை ஆசீர்வதிப்பாராக.

'வாலிபன்' குடும்பத்தினர்.

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக!


மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம்
கோட்டைமுனை.

தொடர்புகளுக்கு :

ஆசிரியர்,
"வாலிபன்" சஞ்சிகை,
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com


சன் அச்சகம் - மட்டக்களப்பு, 065-2222597



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org